DEPOSITION OF WITNESS

IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,
TENKASI.

**MCOP.No.238/2020**

| | | | |
|---|---|---|---|
| Name | : | சுபா | **Pw1** |
| Father's Name | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Caste | : | | |
| Calling | : | | |
| Religion | : | | |
| Age | : | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 14th day of June 2023.

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் 1ம் மனுதாரர் ஆவேன். நான் எனது நிரூபண வாக்குமூலத்தை இன்று தாக்கல் செய்கிறேன். அதனை எனது முதல் விசாரணை சாட்சியமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். நான் அதை படித்து பார்த்துதான் கையொப்பம் இட்டுள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள சங்கதிகள் உண்மை. முதல் தகவல் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.1 ஆகும். மேற்படி விபத்தில் இறந்துபோன சதீஷ்குமாரின் மார்சரி அட்டையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.2 ஆகும். மேற்படி விபத்தில் இறந்துபோன சதீஷ்குமாரின் இறப்பு சான்றிதழின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.3 ஆகும். டிஎன் 76 எக்ஸ் 8550 என்ற பதிவெண் கொண்ட லாரியின் காப்பீடு சான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.4 ஆகும். 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் உரிமத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.5 ஆகும். பிரேதப் பரிசோதனை அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.6 ஆகும். டிஎன் 76 எக்ஸ் 8550 என்ற பதிவெண் கொண்ட லாரியின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.7 ஆகும். டிஎன் 72 டி 7113 என்ற பதிவெண் கொண்ட வாகனத்தின்

மோட்டார் வாகன ஆய்வறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.8 ஆகும். மாதிரி வரைபடத்தின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.9 ஆகும். பார்வை மகஜரின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.10 ஆகும். குற்ற இறுதி அறிக்கையின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.11 ஆகும். மேற்படி விபத்தில் இறந்துபோன சதீஷ்குமாரின் வாரிசு சான்றின் ஒளிப்பட நகல் ம.சா.ஆ.12 ஆகும். மனுப்படி உத்தரவிட வேண்டுகிறேன்.

<u>3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை</u>

விபத்தில் இறந்தவர் என்னுடைய மகன். எனக்கு 2 குழந்தைகள். விபத்து சமயத்தில் என் மகன் ஐடி படித்திருந்தார். அதற்கான சான்றிதழை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகன் மாதம் 15 ஆயிரம் வரை சம்பாதித்தான் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. விபத்து நடந்த விபரம் எனக்கு நேரடியாகத் தெரியாது. என்னுடைய மகன் ஓட்டிச் சென்ற இருசக்கர வாகனம் என்னுடைய கணவருடையதாகும். என்னுடைய மகன் ஓட்டிச் சென்ற மோட்டார் சைக்கிளின் காப்பீடு கழகத்தைத் தரப்பினர்களாக இந்த மனுவில் சேர்க்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய மகனுக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. ஆனால் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவில்லை. என்னுடைய மகன் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச் சென்று லாரியின் பின்பகுதியில் மோதி இந்த விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. என்னுடைய மகன் தான் நின்றுகொண்டிருந்த லாரியின் பின்பகுதியில் மோதி இந்த விபத்தை ஏற்படுத்தியிருக்கிறார் என்றால் சரியல்ல. விபத்தைப் பற்றி கேள்விதான் பட்டேன். இந்த விபத்திற்கு என்னுடைய மகன் தான் காரணம் என்பதாலும், லாரி ஓட்டுநர் காரணமில்லை என்பதாலும் இந்த 3 ம் எதிர்மனுதாரர் நஷ்டஈடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. நான் கோரியிருக்கும் நஷ்டஈடு அதிகம் என்றும், அதுவும் எனக்கு கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. 3 ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

G ANURADHA Digitally signed by G ANURADHA
Date: 2023.06.14 17:51:16 +0530